கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 23.02.2013

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
யாழுமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பவீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
அதிரடி
சுபீட்சம்
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (86)

### 86. புலிகளின் புலனாய்வுப் பிரிவில் ஒரு 'கதை சொல்லி'!



எமது வதை முகாமுக்கு புதிதாக சிறீ என்ற ஒருவன் கொண்டுவரப்பட்டான். அவன் புலிகளின் புலனாய்வுப் பிரதிப் பொறுப்பாளரான கபிலம்மானுடன் வேலை செய்த ஒருவன் என, அவன் வாய் மூலமாகவே அறிந்து கொண்டோம். அவன் ஏதோ நிதி விவகாரத்தில் ஒழுங்கீனமாக நடந்ததால் அங்கு கொண்டு வரப்பட்டதாக அவனே சொன்னான். அதாவது, புலனாய்வுப் பிரிவில் வேலை செய்த ஒருவருடைய கஸ்டத்தில் வாழும் குடும்பத்தினருக்கு, கபிலம்மானின் அனுமதி இல்லாமல் ஒருதொகை பணத்தைத் தான் வழங்கியதே தன்மீதான குற்றச்சாட்டு என அவன் தெரிவித்தான்.

பொதுவாக இம்மாதிரி வருபவர்களுடன் உள்ளே இருப்பவர்கள் உடனடியாகப் பழகமாட்டார்கள். அவர்கள் சொல்வதையும் இலேசில் நம்பமாட்டார்கள். புதிதாக வந்தவரைச் சில நாட்கள் நன்கு அவதானித்த பின்னரே அவருடன் பழகுவார்கள். ஏனெனில் புலிகள் இந்த மாதிரிச் சிலரை கைதிகள் வேசத்தில் இடையிடையே உள்ளே அனுப்பி, அங்குள்ள கைதிகள் என்ன மனோநிலையில் இருக்கிறார்கள், என்ன திட்டங்கள் வைத்திருக்கிறார்கள், தமது விசாரணைகளின் போது சொல்லாமல் ஒளித்த ஏதாவது விடயங்கள் மீதமிருக்கின்றனவா என உளவு பார்ப்பதுண்டு.

எனவே இந்த சிறீ என்பவனின் விடயத்திலும் நாம் கவனமாகவே நடந்து கொண்டோம். ஆனால் அவன் எல்லோருடனும் நீண்டகாலம் பழகியவன் போல வலிந்து வந்து கதைக்கத் தொடங்கிவிட்டான். என்னைப் பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டதாகச் சொல்லி, என்னுடனும் வலிந்து வந்து கதைத்தான்.

அவன் சொன்ன தகவல்களிலிருந்து அவனும் கபிலம்மான், காந்தி போன்றவர்கள் போல திரிகோணமலையைச் சேர்ந்தவன் எனத் தெரிய வந்தது. கபிலம்மானால் பயிற்றுவிக்கப்பட்ட அவன், தனது கூடுதலான புலனாய்வு வேலைகளை கொழும்பிலும், தென்னிலங்கையின் சில பகுதிகளிலும் மேற்கொண்டு வந்திருக்கிறான். ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்ன மீதான புலிகளின் தாக்குதல் உட்படப் பல தென்னிலங்கைத் தாக்குதல் முயற்சிகளில் தான் புலனாய்வு வேலைகளில் ஈடுபட்டதாகச் சொன்னான்.

தென்னிலங்கையில் தாம் புலனாய்வு வேலைகளுக்குச் செல்லும்போது, தமது நடவடிக்கைகள் குறித்து புலனாய்வுப் பிரிவின் மேல்மட்டத்திலுள்ள ஒரு சிலருக்கு மட்டுமே அந்தத் தகவல் தெரிந்திருக்கும் என்றும் அவன் சொன்னான். அத்துடன் ஏற்கெனவே தென்னிலங்கையில் புலனாய்வு வேலைகளில் ஈடுபட்டிருக்கும் புலிக் குழுக்களுக்கும் தமக்கும் எந்தவிதமான அறிமுகமோ, தொடர்புகளோ இருப்பதில்லை எனவும் சொன்னான்.

அத்துடன், புலி இயக்க உறுப்பினர்களின் பழக்க வழக்கங்களில் இருக்கும் கடுமையான கட்டுப்பாடுகள் தமது விடயத்தில் இருப்பதில்லை எனவும் அந்த சிறீ என்பவன் குறிப்பிட்டான். அதாவது தாம் தென்னிலங்கையில் புலனாய்வு வேலைகளில் ஈடுபட்டிருக்கையில், மதுபானம் அருந்துவது, சிகரட் புகைப்பது, பெண்களுடன் பழகுவது, சினிமா பார்ப்பது, சூதாடுவது என்பன போன்ற விடயங்களில் ஈடுபடுவதற்குத் தமக்கு அனுமதி உண்டென்று அவன் குறிப்பிட்டான். ஏனெனில் அப்படியான செயல்களில் ஈடுபடுவதால் ஏதாவது பயனுள்ள தகவல்களைத் தமது இயக்கம் பெற வாய்ப்புண்டென்றால், அதைச் செய்வதில் தவறில்லை எனத் தமது தலைமை கருதுகிறது என்பது அவன் சொன்ன காரணம்.

அவன் சொன்ன இந்தக் கருத்தைக் கேட்டபோது, வியட்நாம் யுத்தத்தின் போது, அங்கு தென் வியட்நாம் தேசிய விடுதலை முன்னணி கையாண்ட சில நடைமுறைகள் எனக்கு ஞாபகம் வந்தது. அதாவது போரின் இறுதிக் கட்டத்தின் போது, 'வியட்கொங்' கெரில்லாக்கள் உலகிலேயே அமெரிக்காவுக்கு வெளியே இருந்த மிகப்பெரிய அமெரிக்க இராணுவத் தளமான வியட்நாமில் இருந்த 'டனாங்' இராணுவத் தளத்தைத் தகர்க்க முடிவு செய்தனர். பல்லாயிரக்கணக்கான அமெரிக்க இராணுவ வீரர்கள் தங்கியிருந்த அந்த முகாம் ஏழு பாதுகாப்பு வளையங்களைக் கொண்டது. அந்தத் தளத்தைத் தகர்ப்பதானால், முறையான புலனாய்வு மேற்கொள்ள வேண்டும். அதற்கு கெரில்லாக்கள் அமெரிக்கப் போர் வீரர்களுடன் பழகும் வியட்நாமிய விபச்சாரிகளைப் பயன்படுத்தியே அதைச் செய்தனர். அதன் மூலம் மிகவும் வெற்றிகரமான முறையில் தமது தாக்குதலை நடாத்தி முடித்தனர்.

புலிகள் வியட்நாமிய விடுதலைப் போராளிகள் போன்ற ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள் அல்ல. இன்னும் சொல்லப்போனால், ஏகாதிபத்தியத்தில் தங்கி நின்றே புலிகள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். (அதுவே புலிகளது போராட்டம் இறுதியில் தோல்வியில் முடிந்ததிற்கான பிரதான காரணிகளில் ஒன்றுமாகும்) ஆனால் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் உலகிலுள்ள அநேகமான இயக்கங்கள் இந்த மாதிரியான வழிமுறைகளைப் பயன்படுத்தி வந்தது, ஒரு பொது அம்சமாக இருந்து வந்திருக்கிறது. அதையே புலிகளும் செய்திருக்கின்றனர்.



Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

Newsnow
Thendral Radio



இந்த சிறீ சொன்ன தகவல்களிலிருந்து, புலிகளின் புலனாய்வுப் பிரிவு முக்கியஸ்தர்களிடையே சில வேறுபாடுகளும் உண்டென்பது புலனாகியது. அவனது கருத்துப்படி, பொட்டம்மானை விட, கபிலம்மான் சற்று மென்மையானவர் என்ற கருத்து இருப்பது தெரிந்தது. கபிலம்மான் தனக்குத் தெரிந்த பல மாற்று இயக்கப் போராளிகளை கண்டும் காணாமல் விடுதலை செய்திருப்பதாக அவன் சொன்னான். சிறீயின் கருத்துப்படி, பொட்டம்மானைப் பொறுத்தவரை, அவன் அப்படியானவர்களுக்கு வழங்கும் தீர்ப்பு 'மண்டையில் போடுவது' மட்டுமே.

சிறீ இன்னொரு தகவலையும் என்னிடம் சொன்னான். அதாவது நான் காலம் பிந்தி என்றாலும் விடுதலை செய்யப்படுவேன் என்றும், அந்தத் தகவலை தான் கபிலம்மானுடன் இருந்த காலத்தில் அறிந்து கொண்டதாகவும் சொன்னான். அதற்குக் காரணம் என் போன்றவர்களின் விடயங்களை கபிலம்மான்; கவனிப்பதுதான் என்றும் சொன்னான். பொட்டம்மானைப் பொறுத்தவரை, புலிகளால் சந்தேகத்தில் கைது செய்யப்படுபவர்கள் அனைவரும் குற்றவாளிகளே. அவர்களை சிறையில் அடைத்து வைத்து சாப்பாடு கொடுத்து, அவர்களை நாட்கணக்கில் விசாரித்துக் கொண்டிருப்பது வீண் வேலை. அப்படியானவர்களின் கதையை ஒரு துப்பாக்கிக் குண்டு மூலம் முடித்துவிட வேண்டும் என்பதே, பொட்டம்மானின் நிலைப்பாடு என்று அவன் சொன்னான்.

இந்த சிறீ என்பவன்தான், சில நாட்களுக்கு முன்னதாக வதை முகாமுக்கு கொண்டு வரப்பட்ட விசுவமடு தோழர் இராசமூர்த்தி என்பவரதும், அவரது மகனினதும் கதையையும் எனக்குக் கூறினான்.

அவன் சொன்ன தகவலின்படி, புலிகளுடன் இருந்த தனது மகனை மீட்டெடுக்க பல வழிகளிலும் முயன்ற இராசமூர்த்தி, இறுதியாக ஒருவாறு மகனை இயக்கத்திலிருந்து தப்ப வைப்பதற்கு அவனைச் சம்மதிக்க வைத்து செயலில் இறங்கினார். அதன்படி கண்டி வீதி ஓமந்தையில் புலிகளின் தடை முகாமுக்கு பக்கவாட்டில் இருந்த காடுகளுக்கூடாக, தனது மகனை இரகசியமாக அழைத்துக்கொண்டு இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த வவுனியாவை நோக்கிச் சென்றிருக்கிறார் இராசமூர்த்தி.

இந்தப் பாதையால் ஏற்கெனவே பலர் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து தப்பி தென்னிலங்கைக்குச் சென்றிருக்கிறார்கள். அப்படியானவர்களுக்கு அந்தக் காட்டுப் பகுதியை நன்கு அறிந்த கிராமவாசிகள் சிலர் பணத்தை வாங்கிக்கொண்டு உதவியிருக்கிறார்கள். இன்னும் சிலருக்கு புலிகளில் உள்ள சிலரே உதவியிருக்கிறார்கள் என்றும் கதைகள் வெளிவந்திருந்தன. இவைகள் எல்லாம் நான் கடத்தப்படுவதற்கு முன்னர் வெளியில் இருக்கும்போது அறிந்திருந்த சங்கதிகள். நான் இந்த வதை முகாமுக்கு வந்த பின்னர்கூட, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனான மந்திகையைச் சேர்ந்த ஒருவர் அவ்வாறு செல்லும்போது கைது செய்யப்பட்டு, எமது வதை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு அடைக்கப்பட்டிருந்தார்.

அந்தப் பாதையிலேயே தோழர் இராசமூர்த்தியும் தனது மகனை இயக்கத்திலிருந்து வெளியே எடுத்து அழைத்துச் சென்றிருக்கிறார். ஆனால் அவரது கஸ்டகாலம் அவர் சென்ற நேரத்தில் புலிகள் இவ்வாறான தப்பியோடுதல்களைத் தடுப்பதற்காக பாதுகாப்பைப் பலப்படுத்தி இருந்திருக்கிறார்கள். அதனால் அவரும், அவரது மகனும் புலிகளிடம் அகப்பட்டுவிட்டார்கள்! புலிகளைப் பொறுத்தவரை இது சாதாரண குற்றம் அல்ல. இராசமூர்த்தி என்ற சாதாரண மனிதர் அவ்வாறு செய்தாலே மகா குற்றம். அப்படியிருக்க தமது இயக்கத்தில் இருக்கும் ஒருவரை - அவர் மகனாக இருந்தாலும் - 'கடத்தி'ச் சென்றால், அது புலிகளின் அகராதியில் எத்தகைய குற்றமாகக் கணிக்கப்பட்டிருக்கும் என்பதை விவரிக்க வேண்டியதில்லை.

மகனை இரகசியமாகக் கூட்டிச் செல்லும்போது, பிடிபட்டால் புலிகள் தம்மை என்ன செய்வார்கள் என்பது, புலிகளில் சிலருடன் நெருங்கிப் பழகிய இராசமூர்த்திக்கும் தெரியாமல் இல்லை. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், தன்னையே அழித்துக் கொள்வது என அவர் தீர்மானித்திருந்தபடியால், கூடவே தான் அருந்தித் தன்னை மாய்த்துக் கொள்வதற்காக ஒரு கிருமிநாசினிப் புட்டியையும் எடுத்துச் சென்றிருக்கிறார். (பாருங்கள்! இந்த 'விடுதலை வீரர்களின்' கைகளில் இருந்து தப்புவதற்காக மக்கள் தமது இன்னுயிரை விடவும் தயாராக இருந்திருக்கிறார்கள்!!) புலிகள் அவரையும் மகனையும் கைது செய்ததும், இராசமூர்த்தி கிருமிநாசினியை அருந்தி இருக்கிறார். ஆனால் புலிகள் விரைந்து தடுத்துவிட்டதால், அதைச் சரியாக அவர் அருந்த முடியவில்லை. அதனால் அவரது உயிர் காப்பாற்றப்பட்டு, இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறார்.

இந்தக் கதையை சிறீ என்பவன் சொல்லித்தான் நான் முதலில் அறிந்து கொண்டேன். பின்னர் தோழர் இராசமூர்த்தியும் நானும் ஒன்றாக நாவற்குழி - கோவிலாக்கண்டி திறந்தவெளி சிசை;சாலையில் இருந்தபோது, அது உண்மைதான் என்பதை அவரிடம் உறுதிப்படுத்திக் கொண்டேன்.

தொடரும்

**முன்னைய பதிவுகள்**